ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2399/43 - 2024 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2024.08.30

*2399/43 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

ஊவா மாகாண சபை அரச சேவை ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிக்கோவை

**ஊவா மாகாண சபை அரச சேவை அலுவலர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாடு தொடர்பாக மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்வதற்கான ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிக்கோவை**

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் 32(1) மற்றும் 32(3) ஆம் பிரிவுகளின் பிரகாரம், ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய, ஊவா மாகாண சபை அரச சேவை அலுவலர்களின் ஒழுக்காற்று கட்டுப்பாடு தொடர்பாக மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றும் அதனுடன் இணைந்த விடயங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்வதற்கான ஊவா மாகாண சபை அரச சேவை ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிக்கோவை 2024 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் அமுலாக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1762/ 33 மற்றும் 2012.06.14 ஆந் திகதியுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட, 2012.06.01 ஆந் திகதி முதல் செயற்பாட்டிலுள்ள ஊவா மாகாண சபை அரச சேவை ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிக்கோவை, அதற்கமைய எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டதாக கருதப்படுகின்ற அனைத்து தீர்மானங்களும் மற்றும் நடவடிக்கைகளை பாதிக்காத வகையில் 2024 ஆம் வருடம் செத்தெம்பர் மாதம் 01 ஆந்*

1A - PG 6851 — 07 (2024/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திகதி முதல் இரத்துச் செய்யப்படுகின்றது. அவ் ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய, ஆரம்பித்திருக்கும் அல்லது முடிவுறுத்தியிருக்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு இப்புதிய ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகள் எவ்வகையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்த மாட்டாது.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஆளுநர்,
ஊவா மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
ஊவா மாகாணம்,
இராஜ வீதி,
பதுளை,
2024, ஒகத்து 26.

EOG 08-0352

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.